**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 902 of 2025 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : காசிராஜன்

Father's Name : பவுன்ராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்பொழுது சோமனூரில் வசித்து டெக்ஸ்டைசில் அக்கவுண்டன்டாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த வருடம் இரவு 7 முதல் 8 மணியளவில் சோமனூரில் வைத்து எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தகராறு ஏற்பட்டது. அதனால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 03.11.2024 ம் தேதியன்று இரவு 8 மணிக்கு நானும் என் மாமாவும் சோமனூரில்

உள்ள டாஸ்மார்க் கடையில் மது அருந்தி கொண்டிருந்தபோது எழுந்து சென்று நான் ஆம்லெட் வாங்கிவிட்டு வந்தேன் என்றும், எனது டேபிள் அருகே வந்தபோது ஆஜர் எதிரி ஆம்லெட்டை தட்டி விட்டார் என்றும், அதை நான் கேட்கவே கெட்டவார்த்தையால் பேசினார் என்றும், கையில் வைத்திருந்த காலி பாட்டிலை வைத்து என்னை அடித்தார் என்றும், அதில் என் தலை மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் வந்து பார்க்கவே எனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்பொழுது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.09 18:33:52 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**